**தமிழ்நாடு மாநிலத் திட்ட இயக்குநர் மற்றும் பள்ளிக் கல்வி இயக்குநரின் இணை செயல்முறைகள். சென்னை – 600 006**

**ந.க.எண்:1533/C7/வாசிப்பு இயக்கம் /ஒபக/2024, நாள்: 13.06.2024**

**பொருள்:** ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித்துறை – 2024-25 ஆம் ஆண்டில் அரசு, தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகளில் வாசிப்பு இயக்கம் – செயல்படுத்துதல் – வழிகாட்டு நெறிமுறைகள் வழங்குதல் சார்ந்து

**பார்வை:** இவ்வலுவலகக் கடிதம் ந.க.எண்:2123/C7/ வாசிப்பு இயக்கம் /ஒபக/ 2023, நாள்: 06.06.2023

*****

பள்ளிக் குழந்தைகளிடம் உரையாடலைத் தொடங்கவும், இயல்பாக உரையாடவும், வாசிப்பு தான் வாசலாக அமையும். வாசிப்பின் வழியாக சமூக சிந்தனையைத் தூண்டவும் உணர்வுகளை வெளிக் கொண்டு வரவும் மாபெரும் வாசிப்பு இயக்கத்தை நடத்திட ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி திட்டமிட்டுள்ளது.

இதன் அடிப்படையில் சிறு சிறு படைப்புகளை உருவாக்கும் விதமாக முதன்மைக் கருத்தாளர்கள், கருத்தாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் சிறார் எழுத்தாளர்களைக் கொண்டு பல கட்டங்களாகப் பணிமனைகள் நடைபெற்று வாசிப்பு இயக்கத்திற்கான கதைப் புத்தகங்கள் நுழை, நட, ஓடு, பற என்ற வாசிப்பு நிலைகளில் கடந்த 2023 செப்டம்பர் மாதம் முதற்கட்டமாக 53 புத்தகங்கள் உருவாக்கப்பட்டு அனைத்து அரசுப்பள்ளிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

அப்புத்தகங்களைக் கொண்டு முன்னோட்டமாக (Pilot study) 11 மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட 11 ஒன்றியங்களில் மட்டும் இத்திட்டம் நடைபெற்று வந்தது. மாணவர்களிடையே நடத்தப்பட்ட இப்பரிசோதனை முயற்சி குறிப்பிடத்தக்க அடைவைப் பெற்றுத் தந்துள்ளது.

இதைத் தொடர்ந்து இக்கல்வி ஆண்டில் மேலும் 70 புத்தகங்கள் மற்றும் 1 வாசிப்பு இயக்கக் கையேடு அனைத்து மாவட்டங்களுக்கும் அனுப்பப்பட உள்ளன. அனைத்து பள்ளிகளிலும் மாணவர்களின் வாசிப்புத்திறன் வளர்ச்சியில் பொறுப்பேற்கும் ஆசிரியர்களே இவ்வாசிப்பியக்கத்தின் மைய ஆதாரமாக இருந்து இயக்குவிக்க உள்ளனர்.

**இச்செயல்பாட்டின் முக்கிய நோக்கம்:**

பள்ளி மாணவர்களின் வாசிப்புத்திறனை மேம்படுத்தும் நோக்கில் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித்துறை வாசிப்பு இயக்கத்தை முன்னெடுத்துள்ளது. சிறு புத்தகங்களின் வழி மாணவர்களுக்கு வாசிப்பின் மீது ஆர்வத்தை உண்டாக்கி தொடர் வாசிப்பை செயல்படுத்த உள்ளோம்.

உடலுக்கு உடற்பயிற்சி போல மனதிற்குப் பயிற்சி வாசிப்பு தான். இளைப்பாறுதலையும் அதே நேரத்தில் மனவெழுச்சியையும் தரக்கூடிய ஒன்றாக கதை வாசிப்பு உள்ளது. விளையாட்டுப் பாடவேளை போல நூலக பாட வேளைகளையும் உறுதி செய்தல் அவசியமாகிறது. மாணவர்களைச் சுயமாக வாசிக்க வைப்பதே (Independent reading) வாசிப்பு இயக்க நோக்கங்களில் முதன்மையானது.

ஒரு கதை - ஒரு புத்தகம் - 16 பக்கங்கள் என்கிற அடிப்படையில் இப்புத்தகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. வழக்கம் போல, மாணவர்கள் பயிலும் வகுப்பு - வயதினைக் கருத்தில் கொள்ளாமல் வாசிப்பு நிலைகளைக் (Reading level) கணக்கில் கொண்டு வாசிப்பு இயக்கப் புத்தகங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. நுழை, நட, ஓடு, பற என நான்கு நிலைகளில் புத்தகங்கள் உருவாக்கப்பட்டு வகுப்பறை நூலகங்களாக இவை கொண்டுவரப்பட்டுள்ளது. மாணவ வாசிப்பு திறன் மேம்பாட்டில் உயர் அலுவலர் முதல் ஆசிரியர் நிலை வரை ஒரு கூட்டு நடவடிக்கை அவசியமாகிறது.

இந்தக் கல்வி ஆண்டில் (2024-25) மேலும் 70 புத்தகங்கள் அனுப்பப்பட உள்ளன. இத்துடன் 16 பக்கங்களைக் கொண்ட எளிய வாசிப்பு இயக்கக் கையேடு ஒரு பள்ளிக்கு ஒன்று வீதம் வழங்கப்படுகிறது. இக்கையேட்டினை முதலில் தலைமையாசிரியர்கள் முழுமையாக வாசிக்க வேண்டும். வாசிப்பு இயக்கத்தில் தலைமையாசிரியரே பள்ளிப் பொறுப்பாளர் ஆவார்.

வாசிப்பு இயக்கத்தில் புரிதல் மிக அவசியமானது. வாசிப்பு இயக்கத்தின் நோக்கம், தேவை, கதை வாசிப்புக்கான நேரம் ஆசிரியர் மற்றும் தலைமையாசிரியர் பணிகள், செய்ய வேண்டியவை போன்ற வழிகாட்டுதல்களை இந்த எளிய கையேடு உள்ளடக்கியுள்ளது. இக்கையேடு வாசிப்பு இயக்கப் புத்தகங்களையும் செயல் வடிவத்தையும் புரிந்து கொள்ள பெரிதும் உதவும்.

## திட்டத்தின் செயல்பாட்டிற்கான நிலையான வழிக்காட்டு நெறிமுறைகள் (SOP)

## கடமைகள் மற்றும் பொறுப்புகள்

**பள்ளிக் கல்வி இயக்ககம் மற்றும் தொடக்கக் கல்வி இயக்ககம்**

- ஆய்வு அலுவலர்களான மாவட்ட முதன்மை கல்வி அலுவலர், மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை மற்றும் தொடக்கநிலை) மற்றும் வட்டார கல்வி அலுவலர் ஆகியோருக்கு உரிய அறிவுரை வழங்குதல் வேண்டும்.
- கல்வியாண்டுத் தொடக்கத்தில் நடைபெறும் அனைத்து அரசுப்பள்ளித் தலைமையாசிரியர்கள் கூட்டத்தில் வாசிப்பு இயக்கம் குறித்த அமர்வைக் கட்டாயம் நடத்த வேண்டும்.
- 1 முதல் 12 ம் வகுப்பு வரை அனைத்து பிரிவுகளுக்கும் வாசிப்பு இயக்கப் புத்தகத் தொகுப்புகள் வழங்கப்பட்டிருப்பதை உறுதி செய்தல் வேண்டும். 4 முதல் 9 வரை உள்ள வகுப்புகளுக்கான கால அட்டவணையில் நூலக பாடவேளை இருப்பதை உறுதி செய்தல் வேண்டும்.
- முதல் CRC - பயிற்சியில் அனைத்து ஆசிரியர்களுக்கும் வாசிப்பு இயக்கக் கையேடு மற்றும் SOP சார்ந்து பயிற்சி அளித்தலை உறுதி செய்தல் வேண்டும்.
- வாசிப்பு இயக்கக் கையேடு அனைத்து அரசு பள்ளிகளுக்கும் சேர்ந்ததை உறுதி செய்து அனைத்து அரசுப் பள்ளித் தலைமையாசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் கையேட்டினைப் படித்து புரிந்து கொண்டு வழிகாட்டுதலின் படி செயல்பட அறிவுரை வழங்குதல் வேண்டும்.
- வாசிப்பு இயக்கப் புத்தகங்களைக் கையாளுதல், பள்ளிக்குள் மாணவர் வாசிப்புக்கான நேரம், பின்தொடர்தல், அடைவுகள் பற்றிய திட்டமிடலைச் செய்ய வேண்டும்.
- மாநில திட்ட இயக்ககத்திலிருந்து அனுப்பப்பட்ட புத்தகத் தொகுப்பு ஒவ்வொரு வகுப்பறைக்கும் சென்று சேர்ந்ததை உறுதி செய்ய வேண்டும். எக்காரணம் கொண்டும் கல்வி அலுவலகங்களில் புத்தகங்கள் தேங்கி இருத்தல் கூடாது.
- ஆய்விற்குச் செல்லும் போது நூலகப் பாடவேளையில் வாசிப்பு இயக்கப் புத்தகங்கள் மாணவர்களால் பயன்படுத்தப்படுவதையும், அவர்களின் வாசிப்பு நிலையினை அறிந்து

வாசிக்கும் பழக்கத்தை உற்சாகப்படுத்த சார்ந்த ஆசிரியர்களுக்கு வழிகாட்டுதல்கள் வழங்க வேண்டும்.

- EMIS தளத்தில் பள்ளியில் உள்ள வாசிப்பு இயக்கப் புத்தகங்கள் பதிவேற்றம் செய்யப்படுவதை உறுதி செய்தல் வேண்டும். அவ்வப்போது EMIS-தளத்தில் புதுப்பிக்கப்படும் தரவுகளை, சார்ந்த ஆசிரியர்கள் உள்ளீடு செய்வதைக் கண்காணித்தல் வேண்டும்.
- பள்ளிப் பார்வையின் போது 'மாணவ வாசிப்பு நிலை பற்றி அறிந்து வைத்திருத்தல்' மிக முக்கியம். வாசிப்பு இயக்கத் திட்டத்தின் அனைத்து செயல்பாடுகளையும் கண்காணித்தல் வேண்டும்.

**தலைமை ஆசிரியர் பணிகள்**

- மாநில திட்ட இயக்ககத்திலிருந்து அனுப்பப்பட்ட புத்தகத் தொகுப்புகளின் விவரங்களை EMIS தளத்தில் பதிவேற்றம் செய்திட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
- ஒவ்வொரு வகுப்பறையிலும் வாசிப்பு இயக்கப் புத்தகத் தொகுப்பு மாணவர்கள் பயன்பாட்டில் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். எக்காரணம் கொண்டும் தலைமை ஆசிரியர் அறையில் புத்தகங்கள் தேங்கி இருத்தல் கூடாது.
- வாசிப்பு இயக்கக் கையேட்டினை அனைத்து ஆசிரியர்களும் படித்து புரிந்து கொண்டு வழிகாட்டுதலின் படி செயல்பட அறிவுரை வழங்குதல் வேண்டும்.
- கையேட்டின் முக்கிய அம்சங்கள், வாசிப்பு இயக்கப் புத்தகங்களைக் கையாளுதல், பள்ளிக்குள் மாணவர் வாசிப்புக்கான நேரம், பின்தொடர்தல், அடைவுகள் பற்றிய திட்டமிடலைச் செய்ய வேண்டும்.
- நூலகப் பாடவேளையில் வாசிப்பு இயக்கப் புத்தகங்கள் மாணவர்களால் பயன்படுத்தப்படுவதைக் கண்காணித்தல் வேண்டும்.

**வகுப்பு ஆசிரியர் பணிகள்**

- வாசிப்பு இயக்கக் கையேட்டினை முழுமையாக படித்து புரிந்து கொண்டு வழிகாட்டுதலின் படி செயல்பட வேண்டும்.
- நூலகப் பாடவேளையில் வாசிப்பு இயக்கப் புத்தகங்களை மாணவர்களிடம் அளித்து அவர்கள் முறையாக வாசிப்பதைக் கண்காணித்தல் வேண்டும்.
- மாணவர்களுக்கு இப்புத்தகங்கள் எடுத்து வாசிக்கும் படியான இடத்தில் (Easy Access) இருப்பதை உறுதி செய்தல் வேண்டும்.
- நூலகப் பாடவேளை, இலக்கிய மன்ற செயல்பாடுகளுக்கான நேரம், தமிழ், ஆங்கில மொழி சார் நடவடிக்கைகள் அனைத்திலும் வாசிப்பு இயக்கப் புத்தகங்களைப் பயன்படுத்தலாம்.
- நான்கு வாசிப்பு நிலைகளைப் பற்றி வகுப்பாசிரியர்கள் அறிந்து வைத்திருத்தல் வேண்டும். தங்கள் வகுப்பில் உள்ள மாணவர்கள் (நுழை, நட, ஓடு, பற ஆகிய நான்கு நிலைகளில்) எந்த நிலையில் உள்ளனர் என்கிற விபரம் EMIS தளத்தில் வகுப்பாசிரியரால் பதிவு செய்யப்பட்டு வர வேண்டும்.
- EMIS தளத்தில் பள்ளியில் உள்ள வாசிப்பு இயக்கப் புத்தகங்களின் எண்ணிக்கையைப் பதிவேற்றம் செய்து அவ்வப்போது EMIS-ல் புதுப்பிக்கப்படும் தரவுகளை சார்ந்த ஆசிரியர்கள் உள்ளீடு செய்தல் வேண்டும்.

**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி**

**உதவி திட்ட அலுவலர்கள் (APOs)**

- வாசிப்பு இயக்கப் புத்தகங்கள் மாவட்ட திட்ட அலுவலகத்திலிருந்து அனைத்து பள்ளிகளுக்கும் சென்றடைந்ததை நூலக உட்கூறு ஒருங்கிணைப்பாளர் மூலம் உறுதி செய்தல் வேண்டும்.
- ஆசிரியர் பயிற்றுநர்கள் மூலம் அனைத்து பள்ளிகளிலும் நூலக பாட வேளையில் வாசிப்பு இயக்கப் புத்தகங்களை வாசிப்பதை உறுதி செய்தல் வேண்டும்.
- EMIS தளத்தில் ஆசிரியர்கள் உரிய பதிவுகளைப் பதிவேற்றுதலை மாதம் ஒரு முறை மீளாய்வு செய்து கண்காணித்தல் வேண்டும்.

**மாவட்ட நூலக உட்கூறு ஒருங்கிணைப்பாளர்**

- வாசிப்பு இயக்கப் புத்தகங்களைப் பள்ளிகளுக்குப் பிரிவு வாரியாக கணக்கிட்டு வட்டார வள மையங்கள் மூலம் அனுப்புதல் வேண்டும்.
- EMIS தளத்தில் வாசிப்பு இயக்கப் புத்தகங்கள் பதிவேற்றலை உறுதிச் செய்தல் வேண்டும்.
- அனைத்து ஆசிரியர்களுக்கும் EMIS பதிவு மற்றும் வாசிப்பு இயக்கம் சார்ந்து பயிற்சி மூலம் தெளிவுபடுத்துதல் வேண்டும்.
- மாதம் ஒரு முறை நூலகம் மற்றும் வாசிப்பு இயக்கம் உட்கூறு சார்ந்து ஆசிரியர் பயிற்றுநர்களை மீளாய்வு செய்தல் வேண்டும்.

**பின் இணைப்பு:**

1. பிரிவு வாரியாக (Section wise) வழங்கப்பட வேண்டிய புத்தகத் தொகுப்பு - விவரம்

| வாசிப்பு நிலை | வகுப்பு |
|---|---|
| நுழை | வகுப்பு 1 முதல் 10 வரை |
| நட | வகுப்பு 3 முதல் 10 வரை |
| ஓடு | வகுப்பு 5 முதல் 12 வரை |
| பற | வகுப்பு 6 முதல் 12 வரை |
| பாடல்கள் | வகுப்பு 1 முதல் 10 வரை |

2. முதற்கட்ட புத்தகப் பட்டியல்.

3. இரண்டாம் கட்டப் புத்தகப் பட்டியல்.

4. வாசிப்பு இயக்கக் கையேடு (மென் நகல் - Soft copy)

13/6/24


பள்ளிக்கல்வி இயக்குநர்,
பள்ளிக்கல்வி இயக்ககம்

13/6/24

மாநில திட்ட இயக்குநர்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி

பெறுநர்: அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள், அனைத்து மாவட்டங்கள்

நகல்: தொடக்கக்கல்வி இயக்குநர், சென்னை-6, (தகவலுக்காக)



# வாசிப்பு இயக்கக் கைஏடு

பள்ளிக் கல்வித்துறை
தமிழ்நாடு அரசு



## முதல் எட்டு; முதல் முயற்சி

இதுவரை குழந்தைகளுக்குக் கதை சொல்லியிருக்கிறோம். இப்போது அவர்களே கதைகளை வாசிக்க இருக்கிறார்கள். கேட்போராக (Listeners) இருக்கும் குழந்தைகளை வாசிப்போராக (Readers) மாற்றும் முயற்சி இது. அரசுப் பள்ளிகளில் படிக்கும் எளிய வீட்டுப் பிள்ளைகளின் கைகளில் சின்னச் சின்ன கதைப் புத்தகம் தரும் புதிய முயற்சி.

முன்னேறிய நாடுகளில் 70 ஆண்டுகளுக்கு முன் தொடங்கப்பட்டது குழந்தைகளின் சுய வாசிப்பு (Independent Reading). இந்தியாவில் முதன்முதலாகத் தமிழ்நாட்டில் 250 புத்தகங்களுடன் குழந்தைகளின் சுயவாசிப்பு இயக்கம் தோன்றுகிறது.

பங்கேற்போர்க்குத் தேவையானவை இரண்டு.

1. எளிய வீட்டுக் குழந்தைகள் மீது அன்பு.
2. வாசிப்பு இயக்கம் குறித்த புரிதல்.

தட்டுத் தடுமாறி வாசிக்கும் குழந்தைகளைத் தன்னம்பிக்கையோடு வாசிக்க வைப்பது தான் வாசிப்பு இயக்கத்தின் நோக்கம்; கொண்டாட்ட ரசனையை உருவாக்குவதல்ல; எழுதியவரை – எழுத்தைக் கொண்டாடுவதல்ல நோக்கம்.

சிந்திக்க – உரையாட– குழந்தைகளைப் படைப்பாளிகள் ஆக்க – தூண்டும் ரசனைதான் நோக்கம்.

## வாசிப்பு இயக்கம் ஓர் எளிய அறிமுகம்

கரோனோ காலத்திற்குப் பின் மாணவர்களிடம் வாசிப்பில் தடுமாற்றத்தைக் காண்கிறோம். வாசிப்புத் திறன் பெறாத குழந்தைகள் கற்றலில் பின்தங்குகின்றனர். வாசிக்கத் தெரியாமல் இருப்பதே குழந்தைகள் படிப்பைவிட்டு விலகிச் செல்ல அடிப்படைக் காரணம்.

வாசிப்பில் தடுமாற்றத்தைச் சரிசெய்ய பாடப் புத்தகம் மட்டும் போதாது. மாற்று முயற்சிகள் தேவை. முதலில் சுதந்திரமான சூழலை குழந்தைகளுக்கு உண்டாக்க வேண்டும். வாசிப்பை வளர்த்தெடுக்க புத்தகத்தின் மொழி மற்றும் உள்ளடக்கத்தில் எளிமையும் மகிழ்ச்சியும் அவசியம். அந்த வகையில் கதைப் புத்தகமே வாசிப்புத்திறன் மேம்பாட்டுக்கு உதவும்.

தட்டுத் தடுமாறி வாசிக்கும் குழந்தைகளைத் தன்னம்பிக்கையோடு வாசிக்க வைப்பது தான் வாசிப்பு இயக்கத்தின் நோக்கம்

வாசிப்பு இயக்கத்திற்காகப் புதிய கதைகள் உருவாக்கப்படுகின்றன. அக்கதைகள் தனித்துவமானவை. வாசிக்கத் தடுமாறும் மாணவரை மனதில் கொண்டு உருவாக்கப்பட்டவை.

எளிய சொற்களால் ஆனவை; சின்னச் சின்ன வாக்கியங்களால் ஆனவை. வண்ண வண்ண ஓவியங்களோடு கூடியவை. ஒரு கதை; ஒரு புத்தகம்; 16 பக்கங்கள் என சின்னச் சின்னப் புத்தகங்களாகத் தயாராகியுள்ளன.

‘நான் ஒரு புத்தகம் வாசித்து முடித்து விட்டேன்’ என்கிற மகிழ்வை, மேலும் நிறைய வாசித்திட முடியும் என்கிற நம்பிக்கையை, வாசிப்பு இயக்கப் புத்தகங்கள் தந்திருப்பதை இதுவரையிலான களப் பரிசோதனைகளின் வாயிலாய் அறிகிறோம்.

சுயமாக வாசிக்கும் ஆர்வத்தை ஏற்படுத்தும் இப்புத்தகங்களைத் தொடர்ந்து வாசிக்கும் குழந்தைகளுக்குப் பாடநூல் வாசிப்பும் எளிதாகிவிடும்.



16_Vasippu Iyakka Kaiyedu_Pages.indd 3 12-05-2024 14:32:32

## மொழியும் உள்ளடக்கமும்

புத்தகங்களை வகுப்பறைகளிலும், வீடுகளிலும், வீதிகளிலும் குழந்தைகள் வாசிக்கும் வாய்ப்பு உருவாக வேண்டும். படித்தபின் குழந்தைகளிடம் உரையாட வேண்டும். அப்போதுதான் உள்ளடக்கத்திலும் மொழியிலும் நம் முன்னே நீண்டு கிடக்கும் தூரங்களைக் கடக்க முடியும்.

முதன்முதலில் புத்தக வாசிப்பிற்குள் நுழையும் குழந்தைகளுக்குப் புத்தகத்தின் மொழி மிக முக்கியமானது.

புத்தகங்களை வகுப்பறைகளிலும், வீடுகளிலும், வீதிகளிலும் குழந்தைகள் வாசிக்கும் வாய்ப்பு உருவாக வேண்டும்.

- வாசிப்பு இயக்கத்தில் குழந்தைகள் சிரமமின்றி வாசிக்க மிக எளிய மொழியில் கதைகள் உருவாக்கப்படுகின்றன.
- நீளமான, கடினமான சொற்களைத் தவிர்த்தல், வாசிக்க எளிதாக சொற்களைப் பிரித்து எழுதுதல், குறைவான சொற்களில் கதை எழுதுதல் என கதை வடிவமைப்பில் மிகுந்த கவனம் செலுத்தப்படுகிறது.





16_Vasippu Iyakka Kaiyedu_Pages.indd 4 12-05-2024 14:32:32




## என்ன வித்தியாசம்?

- கலை இலக்கியச் சிந்தனையோடு மட்டும் வாசிப்பு இயக்கத்தை அணுகக் கூடாது.
- இலக்கியம் அல்ல இங்கு முதன்மை; குழந்தைகள் வாசிப்பதே முதன்மை.
- "இதைக் குழந்தைகளால் வாசிக்க முடியுமா?" என்பதையே முதல் கேள்வியாக வைத்து இப்புத்தகங்கள் உருவாகி இருக்கின்றன.
- 'எளிய சொற்கள் – சிறிய வாக்கியம்' என்கிற அடிப்படையே பிற புத்தகங்களில் இருந்து வாசிப்பு இயக்கக் கதைகள் வித்தியாசப்படும் இடம்.

இலக்கியம் அல்ல இங்கு முதன்மை; குழந்தைகள் வாசிப்பதே முதன்மை



16_Vasippu Iyakka Kaiyedu_Pages.indd 5 12-05-2024 14:32:32

## வாசிப்பு நிலைகள்

வாசிப்பு இயக்கக் கதைகள் நான்கு நிலைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை நுழை, நட, ஓடு மற்றும் பற.

- நுழை – வாசிப்பின் முதல் அடி எடுத்து வைக்கும் குழந்தைகளுக்கான நிலை.
- நட – வாசிப்பின் இரண்டாம் நிலை. சுயவாசிப்புக்கு முயலும் குழந்தைகளுக்கான நிலை.
- ஓடு – வாசிப்பின் மூன்றாம் நிலை. நன்கு வாசிக்கும் குழந்தைகளுக்கான நிலை.
- பற – வாசிப்பின் நான்காம் நிலை. சுயமாக மிக நன்றாக வாசிக்கும் குழந்தைகளுக்கான நிலை.

குழந்தையின் வாசிப்பு நிலை அறிந்து கதைகள் தரப்பட வேண்டும்.

குழந்தையின் வாசிப்பு நிலை அறிந்து கதைகள் தரப்பட வேண்டும்.

இந்த நிலைகள் குழந்தையின் வயது மற்றும் பயிலும் வகுப்பின் அடிப்படையில் பிரிக்கப்படவில்லை.

இந்த நிலைகளை அறிய புத்தகத்தின் அட்டையில் அடையாள நிறங்கள் தரப்பட்டுள்ளன.





16_Vasippu Iyakka Kaiyedu_Pages.indd 6 12-05-2024 14:32:33

## நிறங்கள்

நுழை– நீலம்

நட– மஞ்சள்

ஓடு –சிவப்பு

பற– பச்சை

1 நுழை

வாசிப்பின் முதல் எட்டு!

விரல் பிடிப்போம் ; கூட நடப்போம்

2 நட

வாசிப்பில் உறுதி.. வாசிப்பில் நம்பிக்கை!

உடன் நிற்போம் ; உற்சாகம் தருவோம்

3 ஓடு

மலரும் வாசிப்பு.. வளரும் வாசிப்பு!

உரையாடுவோம் ; உருவாக்குவோம்

4 பற

சுய வாசிப்பு.. சுதந்திர வாசிப்பு!

படிக்கும் மாணவரைப் படைப்பாளி ஆக்குவோம்



16_Vasippu Iyakka Kaiyedu_Pages.indd 7 12-05-2024 14:32:33

## களஆய்வு


வாசிப்பு இயக்கத்திற்கென உருவாக்கப்பட்ட கதைகள் குழந்தைகளிடம் எடுத்துச் செல்லப்படுகின்றன. குழந்தைகளிடம் வாசிக்கத் தருவதும், கூடவே இருந்து நிறைகுறைகளை அறிவதும் இங்கு இன்றியமையாதவை. அதன் அடிப்படையில் வாசிப்பு இயக்கக் கதைகளை அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகள், நகர்ப்புறப் பள்ளிகள், மாநகரப் பள்ளிகள், கிராமப்புறப் பள்ளிகளில் பயிலும் பலதரப்பட்ட குழந்தைகளிடம் வாசிக்கத் தந்து ஆய்வுகள் செய்யப்படுகின்றன.

> குழந்தைகளிடம் வாசிக்கத் தருவதும், கூடவே இருந்து நிறைகுறைகளை அறிவதும் இங்கு இன்றியமையாதவை.

குழந்தைகள் வாசிக்க சிரமப்படும் வார்த்தைகள் கண்டறியப்படுகின்றன. மாற்று வார்த்தைகளையும் அதே களம்தான் தீர்மானிக்கிறது.


கதை வாசித்த குழந்தைகளிடமிருந்து பெற்ற கருத்துக்களின் அடிப்படையில் கதைகளிலும் மாற்றங்கள் செய்யப்படுகின்றன. புத்தக உருவாக்கத்தில் குழந்தைகளின் பங்கேற்பு என்பது மிக மிக அவசியம்.








16_Vasippu Iyakka Kaiyedu_Pages.indd 9 12-05-2024 14:32:34



## வாசிப்பு & நூலகம்

- பாடநூல் தாண்டி மாணவர்கள் வாசிப்பதற்கான வாய்ப்புகள் குறைவாக உள்ளன.
- பள்ளிக்குள் இருக்கும் நூலகத்தை முழுமையான பயன்பாட்டுக்குக் கொண்டுவர இத்திட்டம் உதவும்.
- வாரம் ஒன்றிரண்டு பாடவேளைகளே நூலக வாசிப்புக்கு ஒதுக்கப் படுகின்றன.
- தினமும் புத்தகங்களைப் பார்க்கவும் கையிலெடுக்கவும் வாய்ப்புகள் வேண்டும். ஆகவே நேரம் கிடைக்கும் போதெல்லாம் கையிலெடுத்து வாசிக்க ஏதுவாய் வகுப்பறை நூலகங்களை வாசிப்பு இயக்கத்தின் வழி உருவாக்க உள்ளோம்.
- பள்ளியில் அனைத்து வகுப்பறைகளிலும் நூலக வாய்ப்பை ஏற்படுத்தும் நோக்கில் இவ்வியக்கம் திட்டமிடப்பட்டுள்ளது.



16_Vasippu Iyakka Kaiyedu_Pages.indd 10 12-05-2024 14:32:34


## வாசிப்பும் வகுப்பறையும்

- குழந்தைகளின் வாசிப்புப் பழக்கம் நிச்சயம் வகுப்பறையில் நேர்மறை தாக்கங்களை ஏற்படுத்தும்.
- கதைகள் வாசிப்பதால் வகுப்பறையில் உரையாடல் தொடங்கும். புதிய கேள்விகளை எழுப்புவார்கள்.

வகுப்பறை நூலகங்களை வாசிப்பு இயக்கத்தின் வழி உருவாக்க உள்ளோம்.

- எதையும் பல்வேறு கோணங்களில் அணுகுவார்கள். சிந்தனையில் மாற்றம் ஏற்படும். சிக்கல்களுக்குத் தீர்வு காண்பார்கள்.
- குழந்தைகளின் வாசிப்பு மேம்பட மேம்பட அவர்களின் கல்வியிலும் மாற்றங்கள் ஏற்படும். மொழி வசப்படும். தேடிக் கற்கும் ஆர்வம் தானாக உருவாகும்.





## வகுப்பறையில் செய்ய வேண்டியவை

- குழந்தைகள் புத்தகம் எடுத்து வாசிப்பதற்கான நேரத்தை உறுதிசெய்தல்.
- ஏற்கனவே இருக்கும் நூலகப் பாடவேளையை முழுவதுமாகப் பயன்படுத்துவது.
- நாடகம் ஆக்குதல் போன்ற சில கலைவடிவங்களை முயன்று பார்த்தல்.
- வாசித்த புத்தகங்களைப் பற்றி ஆசிரியரோடும், மாணவர்களுக்குள்ளும் பகிர்ந்துகொள்வது; கலந்துரையாடுவது.
- மாணவர்களே படைப்புகள் எழுத ஊக்குவித்தல்.
- வகுப்பறை மலர் / பள்ளி மலர் தயாரித்தல்.

குழந்தைகளின் வாசிப்பு மேம்பட மேம்பட அவர்களின் கல்வியிலும் மாற்றங்கள் ஏற்படும்.

## சுருக்கமான செயல் திட்டம்

வாசிப்பை இயக்கமாக்குதல் என்பது மாணவர்களை வாசிக்க வைப்பதற்கான தொடர் செயல்பாடுகளை உள்ளடக்கியதாகும்.

### வாசிப்பு இயக்கத்தில் ஆசிரியர்கள்:

- வாசிப்பு இயக்கத் தொடர் நடவடிக்கைகளுக்கு ஆசிரியரே மைய ஆதாரம்.
- வாசிப்பு இயக்கத்தில் ஆசிரியரின் ஈடுபாடும் ஆர்வமும் மிக முக்கியமானது.
- தினமும் உடனிருக்கும் ஆசிரியர்கள்தான் மாணவர்கள் வாசிக்க உற்சாகமூட்ட வேண்டும்.
- ஒவ்வொரு ஆசிரியரும் தன் மாணவர்களின் வாசிப்பில் பொறுப்பேற்க வேண்டும்.

### பணிகள்:

- வாசிப்பு இயக்கத்தில் ஆசிரியர்க்குத் தேவையான அடிப்படையான பண்பு – பொறுமை.
- ஆசிரியர்களின் முக்கிய வேலை குழந்தைகள் வாசிப்பதைக் கவனிப்பது.
- மாணவர் வாசித்த பின் அதை வெளிப்படுத்த ஏதுவான சூழலை வகுப்பறைக்குள் ஏற்படுத்தித் தர வேண்டும்.
- குழந்தைகள், கதையை அப்படியே சொல்லக் கட்டாயப்படுத்த வேண்டாம். சரி, தவறு கண்டறியவும் வேண்டாம். குழந்தைகள் தன் கற்பனையையும் சேர்த்து கதை சொல்வார்கள். அதை ஊக்கப்படுத்துவது அவசியம்.
- கதை வாசிக்கும் போதும் அதை வெளிப்படுத்தும் போதும் குழந்தைகள் முழு சுதந்திரத்தை உணர வேண்டும் .
- புத்தகங்கள் எந்த வகையிலும் மாணவர் அணுக முடியாத இடத்தில் இருத்தல் கூடாது.
- தன் வகுப்பு மாணவர்கள் வாசிப்பு இயக்கப் புத்தகங்களில் எந்த நிலையில் இருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.
- மாணவர்களின் வாசிப்பு நிலையில் கவனம் செலுத்தி பின்தொடர வேண்டும்.
- நுழை, நட பிரிவில் வாசிக்கத் தடுமாறும் குழந்தைகளுக்கு உதவ வேண்டும்.
- தமிழ் ஆசிரியர்களிடம் ஏற்கனவே உள்ள, மாணவர் வாசிப்புத்திறன் பதிவேட்டில் இவ்வாசிப்பு நிலைகளையும் குறிக்க வேண்டும்.



16_Vasippu Iyakka Kaiyedu_Pages.indd 13 12-05-2024 14:32:35

- வகுப்புக்கு ஒரு பொறுப்பு மாணவரை நியமிக்கலாம். அம்மாணவர் ஆசிரியரின் வழிகாட்டுதலின் படி இப்புத்தகங்களைக் கையாளலாம்.
- மாணவர்கள் வாசிப்பை வெளிப்படுத்த குறிப்பிட்ட கால இடைவெளியில் சின்னச் சின்ன வாசிப்பியக்க நிகழ்வுகளை வகுப்பறையிலேயே நடத்தலாம்.

  உதாரணமாக கதை சொல்லுதல், நாடகம், பாடுதல், கலந்துரையாடல், எளிய பொம்மலாட்டம், ஓவியம் வரைதல் உள்ளிட்ட ஏதேனும் ஒரு கலை வடிவங்களில் வாசித்த கதைகளை வெளிப்படுத்தலாம்.
- மாணவர்களே சுயமாக கதைகள் மற்றும் பாடல்கள் எழுத ஊக்கப்படுத்த வேண்டும்.

## தலைமை ஆசிரியரின் பணிகள்:

- அனைத்து வகுப்பறையிலும் வாசிப்பு இயக்கப் புத்தகங்கள் இருப்பதையும் வாய்ப்புள்ள நேரத்தில் மாணவர்கள் எடுத்து வாசிக்க ஏதுவான இடத்தில் அவற்றை வைத்திருப்பதையும் உறுதி செய்ய வேண்டும்.
- பள்ளி மேலாண்மைக் குழு கூட்டத்தில் வாசிப்பு இயக்கத்தின் மூலம் மாணவர்களின் திறனை வெளிப்படுத்த வாய்ப்பை ஏற்படுத்தலாம். அதைத் தொடர்ந்து பெற்றோர் வாசிப்பிற்குப் புத்தகங்கள் வைக்கலாம்.





## வாசிப்பும் சமூகமும்

குழந்தைகள் வாசிப்பில் பள்ளியின் பங்களிப்பு மட்டும் போதாது. சமூகத்தின் பங்களிப்பும் அவசியம்.

நாம் அனைவரும் இணைந்து குழந்தைகள் வாசிப்பில் பங்கேற்க வேண்டும்.

பெற்றோர், ஆசிரியர், கல்வி ஆர்வலர்கள், பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள், இல்லம் தேடிக் கல்வித் திட்ட தன்னார்வலர்கள் என அனைவரும் சேர்ந்து குழந்தைகளிடம் வாசிப்பை ஊக்கப்படுத்த வேண்டும். குழந்தைகளுடன் சேர்ந்து உட்கார்ந்து வாசிக்கவும் வேண்டும்.

குழந்தைகள் வாசிப்பில் பள்ளியின் பங்களிப்பு மட்டும் போதாது. சமூகத்தின் பங்களிப்பும் அவசியம்.

வீடும், பள்ளியும், சமூகமும் சேர்ந்து குழந்தைகள் வாழ்வில் வாசிப்பை ஓர் அங்கமாக மாற்ற முயற்சிக்க வேண்டும்.

இணைந்து முயற்சிப்போம்.
வாசிப்பை இயக்கமாக மாற்றுவோம்!



16_Vasippu Iyakka Kaiyedu_Pages.indd 15 12-05-2024 14:32:35



## வகுப்பறைக்கு வழங்கப்படும் புத்தகங்கள்

| வாசிப்பு நிலை | வகுப்பு |
|---|---|
| நுழை | வகுப்பு 1 முதல் 10 வரை |
| நட | வகுப்பு 3 முதல் 10 வரை |
| ஓடு | வகுப்பு 5 முதல் 12 வரை |
| பற | வகுப்பு 6 முதல் 12 வரை |
| பாடல்கள் | வகுப்பு 1 முதல் 10 வரை |

(பிரிவுக்கு 1 தொகுப்பு வீதம்)

**ஓர் அழைப்பு உங்கள் வாழ்க்கையை மாற்றும்**

**(18 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கான 24 × 7 கட்டணமில்லாத் தொலைபேசி எண்கள்)**

குழந்தைத் திருமணம், குழந்தைத் தொழிலாளர் போன்ற பாதிப்புகளுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?
மனம், உடல் மற்றும் பாலியல் சார்ந்த துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?
பாதுகாப்பற்ற சூழலில் உள்ளீர்களா?
அழையுங்கள் குழந்தை உதவி எண் 1098
உங்கள் விவரங்கள் பிறருக்குத் தெரியாமல் பாதுகாக்கப்படும்

மனம், உடல் மற்றும் பாலியல் சார்ந்த துன்புறுத்தலுக்கு அல்லது அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?
பாதுகாப்பற்ற சூழலில் உள்ளீர்களா?
தேர்வு மற்றும் உயர்கல்விக்கு வழிகாட்டுதல் தேவையா?
அழையுங்கள் 14417
உங்கள் விவரங்கள் பிறருக்குத் தெரியாமல் பாதுகாக்கப்படும்

முதல் பதிப்பு: 2024 இந்நூல் 80 ஜி.எஸ்.எம். எலிகண்ட் மேப்லித்தோ தாளில் அச்சிடப்பட்டுள்ளது.
தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் மூலம் ஆப்செட் முறையில் அச்சிட்டோர்: